RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 185 | ஜூலை.8 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த வேண்டும்: திமுக நிர்வாகிகளுக்கு முதல்வர் உத்தரவு

சென்னை: ஜூலை.8-

தமிழகத்தில் வரும் 2026ல் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஆளுங்கட்சியான திமுக, தேர்தலை எதிர்கொள்ள முழு வீச்சில் தயாராகி வருகிறது.

இதன் ஒருபகுதியாக 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை ஜூலை 1ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதையடுத்து 3ம் தேதி முதல் வீடுவீடாகச் சென்று புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரிலான திமுக உறுப்பினர் சேர்க்கை



தொடங்கப்பட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை ஆழ்வார்ப்பேட்டை யில் வீடு, வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை பணியை மேற்கொண்டார்.

அதைத்தொடர்ந்து அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏ.க்கள் முதல் கட்சி உறுப்பினர்கள் வரை அனைவரும் அவரவர் வாக்குச்சாவடிகளில் இருக்கும் வீடுகளுக்குச் சென்று மக்களை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் 'ஓரணியில் தமிழ்நாடு' பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டு திமுக நிர்வாகிகளிடம் முதல்வர் ஸ்டாலின் நேற்று தொலைபேசி வாயிலாகப் பேசினார். அப்போது அவர்களிடம் உறுப்பினர் சேர்க்கையை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. இந்த பிரச்சார இயக்கமானது 45 நாட்கள் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 20% கூடுதல் மாணவர் சேர்க்கைக்கு அனுமதி: அமைச்சர் கோவி.செழியன்

சென்னை: ஜூலை.8-

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2025 26ல் 20% கூடுதலாக மாணவர் சேர்க்கை நடைபெறும் என உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: தமிழக முதல்வர் ஸ்டாலின் உயர்கல்வியும், மருந்துவமும் தனது இருகண்களாக கொண்டு நமது இளைய சமுதாயம் உலகளவில் உயர்ந்த நிலையில் திகழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு உயர்கல்வி அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதால் புதுமைப்பெண், தமிழ் புதல்வன் போன்ற முத்தான திட்டங்களை வழங்கியதுடன் திறன் மிகுந்த சமுதாயத்தை உருவாக்க நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை இலவசமாக திறன் மேம்பாட்டு துறையின் மூலம் வழங்கி வருகிறார்.

இதனால் கடந்த நான்காண்டுகளில் உயர்கல்வி சேர்க்கை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்தியாவிலேயே மாணவர்கள் சேர்க்கை விகிதத்தில் தொடர்ந்து தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. இவ்வாண்டும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்காக அதிகளவில் மாணவர்கள் விண்ணப்பத்து காத்திருக்கின்றனர். இதனை அறிந்திருந்த நமது முதல்வர் இவ்வாண்டு புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிட ஆணையிட்டு, தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் உயர்கல்வி பயில பெருமளவில் மாணாக்கர்கள் காத்திருப்பதை அறிந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கூடுதலாக 20% மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும், அதேபோல் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 15% இடமும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 10% இடமும் கூடுதலாக மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும் முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, இவ்வாண்டு மேற்படி கூடுதல் இடங்கள் அறிவிக்கப்படுகிறது. மாணவர்கள் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தியும், தமிழக முதல்வர் ஏழை, எளிய கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வியில் சிறந்து விளங்க அறிவித்துள்ள அனைத்து நலத்திட்ட உதவிகளையும் பெற்று பெற்றோர்களுக்கும், தமிழகத்துக்கு பெருமை சேர்த்து தங்களது வாழ்வில் முன்னேற்றம் பெற வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 'அதிமுக எப்போதும் விவசாயிகள், மக்களுடன் இருக்கும்' தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிய இபிஎஸ் பேச்சு

கோவை: ஜூலை.8-

"அதிமுக அரசாங்கம் என்பது மக்களுக்கான அரசாங்கம், விவசாயிகளுக்கான அரசாங்கம். இதில் மாற்றுக் கருத்து இல்லை. எப்போதும் நாங்கள் விவசாயிகள் உடன்; மக்கள் உடன் இருப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்." என கோவையில் நேற்று (திங்கள்கிழமை) நடந்த விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசினார்.

'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தனது முதலாவது பிரச்சாரப் பயணத்தை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இன்று (ஜூலை 7) தொடங்கினார். இதையொட்டி இன்று காலை தேக்கம்பட்டியில் உள்ள வனபத்ரகாளியம்மன் கோயிலில் பழனிசாமி தரிசனம் செய்தார்.

அதைத் தொடர்ந்து தேக்கம்பட்டியில் உள்ள திருமண மண்டபத்தில் விவசாய அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்தினார். முன்னாள் அமைச்சரும், அதிமுக கொறடாவுமான எஸ்.பி.வேலுமணி இக்கூட்டத்துக்கு முன்னிலை வகித்தார். இந்தக் கூட்டத்தில் விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக அவர் வலியுறுத்திப் பேசினர்.

அதைத் தொடர்ந்து எடப்பாடி



பழனிசாமி பேசியதாவது : தமிழகம் முழுவதும் உள்ள 6000க்கும் மேற்பட்ட ஏரிகளில் தூர்வாரபட்டது அதிமுக ஆட்சியில் மட்டும்தான். நானும் ஒரு விவசாயி தான். தற்போதும் நான் விவசாயம் செய்து வருகிறேன்.

ஒரு பிள்ளையை தாய் எவ்வாறு பாதுகாக்கிறாரோ அதேபோல் தான் விவசாயிகள் பயிர்களை பாதுகாப்பர். சொட்டுநீர் பாசன திட்டத்தை கொண்டு வந்தது அதிமுக தான். 25 சதவீதம் மானியம் கொடுத்தும், மத்திய அரசிடம் நிதி பெற்றும் அந்தத் திட்டத்தை கொண்டு வந்தோம்.

கால்நடை மருத்துவக் கல்லூரிகள் கொண்டு வரப்பட்டதும் அதிமுக ஆட்சியில்தான். அமெரிக்கா சென்று ஆய்வுசெய்து இங்கு வந்து பசு ஆராய்ச்சி செய்ய மையம் தொடங்கினோம். கலப்பினப் பசுவை உருவாக்கி, பால் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சித்தோம். ஆடு, மீன், பன்றி, கோழி வளர்ப்பு எல்லாமே அங்கு மேற்கொள்ள முடிவுசெய்யப்பட்டது. விவசாயிகளை நேரடியாக அழைத்துச்சென்று பயிற்சி அளிக்க முயற்சித்தோம். ஆனால், அப்போது ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் எல்லாம் கிடப்பில் போடப்பட்டது.

பசுக்களை இலவசமாக விவசாயிகளுக்கு கொடுத்ததும் அதிமுக ஆட்சியில்தான். கால்நடைகளுக்கு நோய் வருவதற்கு முன்பாக அதைத் தடுக்கக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எவ்வாறெல்லாம் செய்ய வேண்டும் என்பதை கற்றுக்கொள்ள ஒரு மையம் அமைத்து விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியதும் அதிமுக ஆட்சியில்தான்.

எங்கள் ஆட்சியில், மும்மனை மின்சாரம் இலவசமாக வழங்கினோம். வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக கொடுத்ததோம். வனவிலங்குகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் பாதிப்புகளை உடனடியாக மதிப்பீடு செய்து அதன் இழப்பீட்டை வழங்கியது நான் முதல்வராக இருந்தபோதுதான்.

திமுக ஆட்சியில் நான்கு முறை மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது

அதிமுக ஆட்சியில் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அண்டை மாநிலமான கேரள மாநிலத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி நீர் பிரச்சினையை தீர்க்க வழி வகுத்தோம். தற்போது ஆட்சி மாற்றம் ஆன பிறகு அந்தப் பிரச்சினை குறித்து இந்த அரசு பேசவோ, அல்லது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவோ இல்லை.

நீர் சுத்திகரிப்பு திட்டத்திற்காக ரூ.11,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 2019ம் ஆண்டில் நான் முதல்வராக இருந்தபோது பிரதமரை சந்தித்தேன். 'நடந்தாய் வாழி காவிரி' என்ற திட்டத்தை விளக்கி அதற்காக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையிலே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிமுக அரசாங்கம் என்பது மக்களுக்கான அரசாங்கம், விவசாயிகளுக்கான அரசாங்கம். இதில் மாற்றுக் கருத்து இல்லை. எப்போதும் நாங்கள் விவசாயிகளுடன்; மக்களுடன் இருப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் செங்கல் சூளை தொழிலாளர்களின் கோரிக்கை மனுக்களின் மீது அதிமுக ஆட்சியில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

## சென்னை – சாலிமர் இடையே சிறப்பு ரயில் சேவை நீட்டிப்பு

சென்னை: ஜூலை.8-

பயணிகளின் வசதிக்காக, சென்னை சென்ட்ரல் மேற்கு வங்க மாநிலம் சாலிமர் இடையே இயக்கப்படும் சிறப்பு ரயில் சேவை நீட்டிக்கப்பட்டுள்ளது.



ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் தேவை அடிப்படையில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களுக்கு பயணிகள் மத்தியில் கிடைக்கும் வரவேற்பை பொறுத்து. இயக்கப்படும் காலம் நீட்டிக்கப்படுகிறது. அந்த வகையில், சென்னை சென்ட்ரல் மேற்குவங்க மாநிலம் சாலிமர் இடையே இயக்கப்படும் சிறப்பு ரயில் சேவை காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் சாலிமர் இடையே புதன்கிழமைகளில் புறப்படும் சிறப்பு ரயில் (02842) சேவை, ஜூலை 16 முதல் 30ம் வரை காலகட்டத்தில் 3 சேவைகள் இயக்கப்பட உள்ளன. சாலிமர் சென்னை சென்ட்ரல் இடையே திங்கள்கிழமைகளில் புறப்படும் சிறப்பு ரயில் (02841) சேவையும் நீட்டிக்கப்படுகிறது. ஜூலை 14 முதல் ஜூலை 28ம் தேதி வரை 3 சேவைகள் இயக்கப்பட உள்ளன.

இதுபோல, விழுப்புரம் ராமேசுவரம் இடையே இயக்கப்படும் சிறப்பு ரயிலின் (0610906110) 6 சேவைகள் (ஜூலை 12 முதல் ஜூலை 27ம் தேதி வரை) நீட்டிக்கப்படுகிறது. சிறப்பு ரயில்களுக்கு டிக்கெட் முன்பதிவு தொடங்கிவிட்டது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிமுகவுக்கு பாஜக சுமையாக இருக்க கூடாது; நமது இலக்கு 2026 அல்ல, 2029 தேர்தல்: நயினார் நாகேந்திரன்

சென்னை: ஜூலை.8-

'அதிமுகவுக்கு பாஜக சுமையாக இருக்கக் கூடாது; நமது இலக்கு 2026 அல்ல; 2029 நாடாளுமன்ற தேர்தல் தான்' என பூத் கமிட்டி கூட்டத்தில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

தமிழக பாஜக பூத் கமிட்டியை வலிமைப்படுத்துவது தொடர்பாக வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான பயிலரங்கம் சென்னையை அடுத்த காட்டாங்கொளத்தூரில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமை தாங்கினார்.

மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகன், மேலிட பொறுப்பாளர் அரவிந்த் மேனன், இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், தேசிய செயற்குழு உறுப்பினர் ஹெச்.ராஜா, மகளிர் அணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன், மாநில துணை தலைவர் கரு.நாகராஜன், பொதுச் செயலாளர் ஏ.பி.முருகானந்தம் உள்பட மூத்த நிர்வாகிகள், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், 2026 சட்டப் பேரவை தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அதைத்தொடர்ந்து மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதாவது: தமிழகத்தில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பாஜக பூத் கமிட்டியை வலிமைப்படுத்தும் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. முருகர் பக்தர்கள் மாநாட்டை இந்து முன்னணி நடத்தினாலும், அதற்கு சிறப்பு சேர்த்தது பாஜகதான். அந்த மாநாட்டைக் கண்டு திமுகவுக்கு தூக்கம் வரவில்லை.



அதனால்தான் இன்று, ஓரணியில் தமிழ்நாடு என திமுக பயணத்தை தொடங்கியிருக்கிறது.

திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி கோட்டைக்கு வர வேண்டும். அதற்கானஅடித்தளம்தான் இந்த பூத் கமிட்டி கூட்டம். ஒரு தொகுதிக்கு 300 பூத் இருக்கும். ஒரு பூத்துக்கு குறைந்தது 12 பேரை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். அதன்படி, ஒரு தொகுதிக்கு 3,600 பேரை பூத் உறுப்பினர்களாக இணைக்க வேண்டும். அப்படி சேர்த்தால், 2026ல் உறுதியாக ஆட்சி மாற்றம் வரும். அதற்கான வியூகங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பார்த்துக் கொள்வார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக மற்றும் பாஜக வாங்கிய வாக்குகளையும், திமுக வாங்கிய வாக்குகளையும் கூட்டிப் பார்த்தால் 24 லட்சம் வாக்குகள் தான் வித்தியாசம் இருக்கிறது. எனவே, ஒரு பூத்துக்கு 37 வாக்குகள் கூடுதலாக பெற்றால், நாம் உறுதியாக 202 தொகுதிகளில் வெற்றி பெற்று விடலாம். இதை கவனத்தில் கொண்டு ஒவ்வொருவரும் செயல்பட்டால் நிச்சயம் ஆட்சி மாற்றம் ஏற்படும். மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இதில் முன்னாள் மற்றும் இன்னாள் மாவட்ட தலைவர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும். நமது நோக்கம் 2026 கிடையாது. 2029 நாடாளுமன்றம்தான் என்பதை அனைவரும் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும்.

2029 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து நிறைய எம்.பி.க்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டும். அதிமுகவுக்கு பாஜக சுமையாக இருக்கக் கூடாது. நீங்கள் பலமாக இருந்தால்தான் அதிமுகவினர் உங்களை வீடுதேடி வந்து அழைப்பார்கள். எனவே, அவ்வாறு அழைக்கும் வகையில் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

பாஜக மண்டல மாநாடுகள்: இதற்கிடையே, 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தயாராகும் வகையில் தமிழக பாஜக சார்பில் மண்டல மாநாடுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்தவகையில், நெல்லையில் ஆகஸ்ட் 17ம் தேதி முதல் மண்டல மாநாடு நடைபெறுகிறது. தொடர்ந்து, மதுரையில் செப்.13, கோவையில் அக்.26, சேலத்தில் நவ.23, தஞ்சாவூரில் டிச.21, திருவண்ணாமலையில் 2026 ஜன.4, திருவள்ளூரில் ஜன.24ம் தேதி என 7 இடங்களில் மண்டல மாநாடுகள் நடைபெற உள்ளன.



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் 5வது வார்டு திமுக சார்பில் 10 வது மற்றும் 12ஆம் வகுப்பு பொதுதேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கி கௌரவித்தல் விழா திமுக போடி நகர் கழக செயலாளர் புருசோத்தமன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்ட திமுக நகரச் செயலாளர் முதல் பரிசு 3000 இரண்டாம் பரிசு 2000 மூன்றாம் பரிசு 1000 வழங்கினார். மேலும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு நோட்டுகள், பேனாக்கள், பென்சில் வழங்கப்பட்டது. பரிசு வழங்கி கௌரவித்தவர்கள். சக்திவேல் ஐந்தாவது செயலாளர் மற்றும் முத்துமணி நகர்மன்ற உறுப்பினர் வழங்கி கௌரவித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினராக திமுக செயற்குழு உறுப்பினர் சங்கர் ,மாவட்ட பிரதிநிதி முகமது பஷீர் , இளைஞர் அணி போடி துணை அமைப்பாளர் லோகேஷ்வர்சங்கர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## திருப்பூர் மாநகராட்சியில் புதிய நியாய விலை கடை சமுதாய நலக்கூடம்: புதிய கட்டிடம் திறப்பு

திருப்பூர், ஜூன்.08-

திருப்பூர் மாவட்டம் மாநகராட்சியில், முதல் மண்டலம் 11, வார்டு பகுதியில். புது காலனி அனுப்பர்பாளையம். பகுதியில் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கட்டிடம். நியாயவிலை கடை ஒன்றும். மற்றும் சமுதாய நலக்கூடம். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே சுப்பராயன் அவர்கள் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியில் 43 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டிடம் கட்டப்பட்டது. 6 7 2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி அளவில் 11 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கே சுப்பராயன். மற்றும், திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார். இவரது பிஏ ரவிச்சந்திரன், திருப்பூர் ஆணையாளர் அமித், திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார். துணை மேயர் பாலசுப்பிரமணி. திருப்பூர் முதல் மண்டல தலைவி உமா மகேஸ்வரி வெங்கடாசலம். துணை ஆணையாளர் சுந்தர்ராஜன். தலைமை பொறியாளர் சபியுல்லா. செயற்பொறியாளர் அலாவுதீன். உதவி செயற்பொறியாளர் ஹரி. இளநிலை பொறியாளர் சரவணன். ஆகிய அதிகாரிகள் அனைவரும் இரு கட்டிடங்களையும் துவக்க விழா ஆரம்பிக்க வந்தனர். அப்போது அந்த வார்டு பகுதியில் உள்ள பொதுமக்களும் மூத்த அரசியல்வாதியான மணி மற்றும் நாகாத்தம்மன் கோயில் நிர்வாகி கல்பனா எம் டி எம் கே பாலு தேமுதிக குழந்தைவேலு வார்டு பெண்களுடன் திரளாக வந்து சட்டமன்ற உறுப்பினர் மற்றும். மாநகராட்சி மேயர் தினேஷ்குமார். மற்றும் அதிகாரிகளுக்கு. ஆரத்தி எடுத்து வரவேற்பு கொடுத்தனர். பின்பு சமுதாய நலக்கூடத்தையும். நியாய விலை கடையையும் முதல் மண்டல தலைவியான உமா மகேஸ்வரி வெங்கடாசலம். மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன், மேயர் தினேஷ்குமார் இவர்கள் கட்டிடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்து விளக்கை ஏற்றி விழாவினை துவக்கி வைத்தனர் பின்பு பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எங்களுக்கு பயன்பெறும் வகையில். சமுதாயக்கூடம், நியாய விலை கடை. இதனை ஏற்படுத்திக் கொடுத்த பதினோராவது மாமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்களை மற்றும் அதிகாரிகளையும் பொதுமக்கள் அனைவரும் பாராட்டுகளை தெரிவித்தனர்.



## தாம்பரத்தில் தேமுதிக சார்பில் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி BLA 2 வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம்

தாம்பரம், ஜூலை.08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி BLA 2 வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம் தாம்பரம் கக்கன் தெருவில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மா.செழியன் தலைமையில் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் உயர்மட்ட குழு உறுப்பினருமான அனகை முருகேசன், செங்கல்பட்டு மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் தொழிற்சங்கப் பேரவை சட்ட ஆலோசகர் ஸ்ரீ ஜெ.பெருமாள் ஆகியோர் கலந்துகொண்டு BLA 2 வாக்கு சாவடி முகவர்களுக்கு கழக வளர்ச்சி குறித்து ஆலோசனை வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர்கள் தாம்பரம் மேற்கு பகுதி ஞானப்பால், தாம்பரம் தெற்கு பகுதி கேட்.எம். தர்மா, தாம்பரம் கிழக்கு சேகர், தாம்பரம் மத்திய பகுதி என்.ஆர்.ஆனந்த், சிட்லபாக்கம் பி.பழனி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மதன், ரங்கன், பவுல்ராஜா, சுஜாதா நந்தினி, அபிநயா, புனித தோமையார் மலை ஒன்றிய நிர்வாகிகள் பாண்டியன், பிரபு, அனந்தன், மகேஷ், டாக்டர் சுமதி, கலாஆறுமுகம், குமார், ஏழுமலை, முத்து, துரை, தாம்பரம் மாநகர நிர்வாகிகள் கணேசன், ரவிக்குமார், ஜார்ஜ், மாலதி, பானுமதி, திலகா, விஜயகுமார், சதீஷ்குமார், குட்டி, பாலாஜி, வள்ளி, அசோக், புருசோத், சங்கர், பத்மாவதி மாவட்ட ஒன்றிய பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்




■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சி மூலம் ரூபாய் 3.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை மாவட்டம் மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்கள் அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் குத்துவிளக்கேற்றி வைத்து கட்டிடத்தை பார்வையிட்டார். மேலூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சங்கீதா அவர்கள், மேலூர் வட்டாட்சியர் திருமதி.செந்தாமரை அவர்கள், மேலூர் நகர்மன்ற தலைவர் திரு.முகம்மது யாசின் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




## காங்கிரஸ் கட்சியின் தெருமுனை பிரசாரம்

தேனி, ஜூலை.08-

தேனி மாவட்டம் போடி வள்ளுவர் சிலை அருகே இந்திய அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாப்போம் என வலியுறுத்தி மாவட்ட தலைவர் முருகேசன் தலைமையில் காங்கிரஸ் கட்சி சுதந்திரத்திற்காக எண்ணற்ற உயிர் தியாகங்களையும் போராட்டங்களையும் நடத்தி கடந்த 60 ஆண்டு காலமாக மக்களுக்காக பாடுபட்ட இயக்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போதுள்ள ஆட்சியாளர்கள் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் செய்த தியாகங்கள் என்ன தற்பொழுது அனைவரும் நிம்மதியுடனும் மன மகிழ்ச்சியுடன் வாழ வழி வகை செய்தது காங்கிரஸ் பெற்றுத் தந்த சுதந்திரம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது என பேசினார். இக்கூட்டத்தில் நகரச் செயலாளர் முஷாக்கு மந்திரி முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் சன்னாசி ,வட்டாரத் தலைவர் கண்ணன், இளைஞர் அணி மாநில செயலாளர் வினோத் , மிழி ஜிஹிசி மாவட்ட தலைவர். ஜம்பு சுதாகர் ,பெருமாள், ரசூல்,உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.



■ சேலம், அருள்மிகு கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் புதிய தேர் வெள்ளோட்டத்தினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்கள். உடன் சேலம் மாநகராட்சி மேயர் திரு.ஆ.இராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.சிவலிங்கம், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, இணை ஆணையர் திருமதி சபர்மதி, அறங்காவலர் குழு தலைவர் திரு.எஸ்.டி.சக்திவேல் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சியில் ஜூலை 15ல் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் பொதுமக்கள் கலந்து கொள்ள தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று முகாம் குறித்து விளக்கம் அளித்து விண்ணப்பம் வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார் ஆய்வு செய்தார்.



## உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்கீழ், உள்ளாட்சி அமைப்புகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு

### மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி தலைமையில் நடைபெற்றது

தேனி, ஜூலை.08-

தேனி மாவட்ட ஆட்சியர் புதிய அலுவலக கூட்டரங்கில் முதல்வரின் முகவரி துறையின் சார்பில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்கீழ், உள்ளாட்சி அமைப்புகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

அன்றாடம் அரசுத்துறைகளை அணுகும் பொதுமக்களுக்கு, அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை செம்மைப்படுத்தி, அரசின் சேவைகளை விரைவாகவும், எளிதாகவும், சென்று சேரும் வண்ணம் நிர்வாகத்தில் மற்றுமொரு மைல் கல்லாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கடைக்கோடி மக்களுக்கும் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள் திட்டங்களை இல்லங்களுக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் நகர்புறங்களில் நடைபெறும் முகாம்களில் 13 துறைகள் மூலம் 43 அரசின் சேவைகளும், ஊரக பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் 15 துறை களின் மூலம் 46 அரசின் சேவைகளும் வழங்க முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, முகாம் நடை பெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், வழங்கப் படவுள்ள அரசு துறைகளின் சேவைகள்/திட்டங்களை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள் மற்றும் தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு, தகவல் கையேடு மற்றும் விண்ணப்பங்கள் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்). முருகையா, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) .சா.கிறிஸ்டோபர் தாஸ், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) வே.சாந்தி, நகராட்சி ஆணையாளர்கள் .கோபிநாத் (சின்னமனூர்), உமாசங்கர் (கம்பம்), செல்வி தமீஹா சுல்தானா (பெரியகுளம்), பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் நகர்புறம்/ ஊரக பகுதிகளைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## வேலூர் சென்னை சில்க்ஸ் துணிக்கடையில் லிவிஸ் புதிய ரக க்கவுண்டர் திறப்பு விழா: ஏ.கே.டிவி நிறுவனர் சரவணன் பங்கேற்று திறந்து வைப்பு

வேலூர் ஜூலை.08-

வேலூர் மாவட்டம், வேலூர், சென்னை சில்க்ஸ் மற்றும் குமரன் தங்க மாளிகை கிளை பிரமாண்டமான துணி மற்றம் தங்க மாளிகையில், லிவிஸ் புதிய பிராண்ட் க்கவுண்டர் திறப்பு விழா சென்னை சில்க்ஸ் மேலாளர் எச். மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக சமூக ஆர்வலரும், ஏ.கே. நெட்வொர்க் மற்றும் ஏ.கே. தொலைக்காட்சி நிறுவனரும் தொழிலதிபருமான ஏ.கே. சரவணன் மற்றும் ஹாலிவ் மெடிக்கல்ஸ் உரிமையாளர் சூரி(எ) சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, இனிப்புகளை வழங்கி, முதல் விற்பனையை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வின் போது சென்னை சில்க்ஸ் மேலாளர் பி.மணிகண்டன், செல்வமூர்த்தி, குமரன் தங்க மாளிகை மேலாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் முக்கிய பிரமுகர்கள், சென்னை சில்க்ஸ் மற்றும் குமரன் தங்க மாளிகை அலுவலர்கள் பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஜூலை.08-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 345 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் வீட்டுமனைபட்டா, முதியோர் உதவித் தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொது மக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.ந.சரவணன் அவர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.செல்வி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பல்லாவரத்தில் மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் வாகனங்களில் ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சி சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் துவக்கி வைத்தார்

பல்லாவரம், ஜூலை.08-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மக்களை சந்திக்க மாவட்டம் வரும் சுற்றுப்பயணம் செல்ல உள்ள நிலையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக சார்பில் பல்லாவரம் பகுதியில் பகுதி செயலாளர் ஜெய்பிரகாஷ் ஏற்பாட்டில் புரட்சி தமிழரின் எழுச்சி பயணம் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற அச்சிடப்பட்ட சிக்கர்களை வாகனங்களில் ஒட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் சா.ராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங் ஆகியோர் கலந்து கொண்டு இருசக்கர வாகனங்கள் ஆட்டோக்கள் கார்கள் போன்றவற்றில் ஸ்டிக்கர் ஒட்டி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர் நிகழ்ச்சியில் பல்லாவரம் பகுதி கழக அவை தலைவர் எம்.குமார், பல்லாவரம் பகுதி கழக துணைச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி எஸ்.சந்தானம், டாக்டர் பிரேம்சந்த், மாவட்ட பிரதிநிதி கௌதம், கீழ்கட்டளை பகுதி செயலாளர் சந்திரசேகர் ராஜா, லிங்கராஜ், வட்ட கழகச் செயலாளர்கள் அக்ரம்கான், ராஜேஷ், ராஜ்பரத், மூர்த்தி, அன்பு, விஜயகுமார், ராஜேஷ் கண்ணா, பிரகாஷ் குமார், பிரசாந்த், கலைமதி பூங்காவனம் ரேவதி தனலட்சுமி மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மகளிர் அணி உட்பட ஏராளமானோர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாம் வருகின்ற ஜூலை 15.07.2025 முதல் செப்டம்பர் 2025 மூன்றாம் வாரம் வரை மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.08-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமனது, சிவகங்கை மாவட்டத்தில் வருகின்ற ஜூலை 15.07.2025 முதல் செப்டம்பர் 2025 மூன்றாம் வாரம் வரை ஒவ்வொரு வாரமும் நான்கு நாட்களில், நாள் ஒன்றுக்கு 6 முகாம்கள் வீதம் மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெற உள்ளது.

இதில் காரைக்குடி மாநகராட்சியில் 27 முகாம்களும், சிவகங்கை, தேவகோட்டை, மானமதுரை ஆகிய நகராட்சிகளில் 31 முகாம்களும், 11 பேரூராட்சிகளில் 22 முகாம்களும் 12 சாதாரண ஊராட்சிகளில் 129 முகாம்களும் 3 புறநகர் ஊராட்சிகளில் 6 முகாம்களும் என மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெற உள்ளது.

நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் நடத்தப்படும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படும்.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும்,பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணப்படும். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளிக்க விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகள், இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

இம்முகாம், தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தன்னார்வலர்கள் மூலம் 07.07.2025 முதல் துண்டு பிரசுரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் வழங்கப்படவுள்ளது. எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் பகுதியில் முகாம் நடைபெறும் நாளில் உரிய ஆவணங்களுடன் கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

கண்டதேவி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோவில் திருத்தேரோட்டம் தொடர்பாக

# மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தேரோட்ட பொறுப்பு அலுவலர்களுடன் கலந்தாலோசனை கூட்டம் மேற்கொண்டு, அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோவிலில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்

தேவகோட்டை, ஜூலை.08-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்டதேவி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோவில் திருத்தேரோட்டம் நடைபெறவுள்ளதைத் முன்னிட்டு, சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோவில் திருத்தேரோட்டம் தொடர்பாக, 06.07.2025 அன்று மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தேரோட்ட பொறுப்பு அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் மேற்கொண்டு, அதனைத்தொடர்ந்து, அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோவிலில் நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட கண்டதேவி கிராமத்திலுள்ள அருள்மிகு சிறகிலிநாதர் சுவாமி என்ற சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோவில் தேரோட்ட நிகழ்ச்சி கடந்தாண்டு சிறப்பாக நடைபெற்றது. கடந்தாண்டை போலவே, இந்தாண்டும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக, திருக்கோவில் தேரோட்ட நிகழ்ச்சியை நடத்திட சிறப்பான பங்களிப்பை அளித்திடல் வேண்டும்.

இப்பணிக்கென சம்மந்தப்பட்ட துறைகள் வாரியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத் தப்படுகிறது. அதில், மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் 2,000 காவலர்களை பாதுகாப்புப் பணிகளுக்காக ஈடுபடுத்திடவும், தேர் செல்லக்கூடிய 4 வீதிகளிலும் கண்காணிப்புப் கேமரா பொருத்திடவும், 3 இடங்களில் கண்காணிப்புக் கோபுரங்கள் அமைத்திடவும், மேலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கண்டதேவி கோவில் அருகில் 9 துறை அலுவலர்களுக்கு கட்டுப்பாட்டு அறை அமைத்திடவும், கூர்உணர்ச்சி மிக்க இடங்களில் 42 கிராம நிர்வாக அலுவலர்களும் கிராம உதவியாளர்களும் பணி அமர்த்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவகோட்டை சார் ஆட்சியர் அவர்களுக்கு திருத்தேரோட்டப் பணியினை சட்ட ஒழுங்கு பிரச்சனை இல்லாமல் நடத்துவதற்கு ஏதுவாக 15 சிறப்பு நிர்வாக நடுவர்களும் நியமித்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், தேவகோட்டை சார் ஆட்சியர் மூலம் தேர் இழுப்பவர்களுக்கு உரிய அனுமதி சீட்டு வழங்கப்படவுள்ளது. மற்ற அலுவலர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களுக்கு தேவகோட்டை சார் ஆட்சியர் மூலம் வழங்கப்படவுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தேவஸ்தானம், திருத்தேரோட்டம் அன்று, திருக்கோவில் ஆகம வழக்கப்படி நடைமுறைகளை பின்பற்றியும், தேரோத்தன்று தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, மருத்துவத்துறை மூலம் 3 மருத்துவ குழுக்களும், 3 அவசர கால ஊர்திகளும் தயார் நிலையில் வைத்திடவும், தீயணைப்புத்துறை மூலம் 2 தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைத்திடவும், கோவில் தெப்பக்குளத்தின் அருகில் தீயணைப்பு மீட்பு வீரர்களும் பணியில் அமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் தேர் சுற்றி வரும் தார்சாலையை சரிசெய்தல் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், வாகன நிறுத்துமிடங்களை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் மூலம் பக்தர்களை அழைத்து வருவதற்கு பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்ற ஏனைய சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் தங்களுக்கான பணிகளை முறையாக மேற்கொண்டு, திருக்கோவில் தேரோட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பான பணியினை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, காவல் துறை, பொதுப்பணித்துறை, மருத்துவத்துறை, மின்சாரத்துறை, போக்குவரத்து துறை, தீயணைப்புத்துறை, உணவு பாதுகாப்புத்துறை உள்ளிட்ட அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பெற்றுக் கொண்டார்.

# தாம்பரம் நாகர்கோவில் சிறப்பு ரயில் இரு வாரங்களுக்கு நீட்டிப்பு

நெல்லை, ஜூலை.08-

தாம்பரம் நாகர்கோவில் இடையே வாராந்திர சிறப்பு ரயில் (எண்.06011) கடந்த மாதம் வரை இயக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் பயணிகள் நலன் கருதி அந்த சிறப்பு ரயில் மேலும் இரு வாரங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தாம்பரத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு சிறப்பு ரயில் இன்றும், வரும் 14ம் தேதியும் திங்கள் கிழமையன்று தாம்பரத்தில் இருந்து 3.30 மணிக்கு புறப்பட்டு, செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், விழுப்புரம், சிதம்பரம், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, நெல்லை, வள்ளியூர் வழியாக நாகர்கோவிலுக்கு காலை 5.15 மணிக்கு போய் சேரும். மறுமார்க்கமாக நாகர்கோவில் தாம்பரம் சிறப்பு ரயில் வரும் 13ம் தேதி இதே மார்க்கத்தில் இயக்கப்பட உள்ளது. இத்தகவலை தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.




# காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்

கொளப்பாக்கம், ஜூலை.08-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த கொளப்பாக்கம் பாலாஜி மினி ஹாலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்களுக்கு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் காட்டான் குளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம் டி லோகநாதன் தலைமை தாங்கினார். முன்னதாக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்/ காட்டாங் குளத்தூர் ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன் அனைவரையும் வரவேற்றனர். ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், நேதாஜி, குணா, ராஜேந்திரன், பொன்னுசாமி, கருணாகரன், ஸ்ரீகாந்த், பத்மநாபன், மற்றும் அவைத் தலைவர் ரங்கநாதன், நெடுங்குன்றம் ஊராட்சி மன்ற தலைவர் வனிதா ஸ்ரீ சீனிவாசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன், ஆகியோர் கலந்து கொண்டு உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து ஆலோசனைகள் வழங்கினார்கள். இதில் ஒன்றிய அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி,மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மற்றும் கழக முன்னோடிகள் உட்பட ஏராளமா னோர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளரும் ஒன்றிய குழு துணை தலைவருமான ஏ.வி.எம்.இளங்கோவன் நன்றி கூறினார்.








# சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பவர் ஸ்டார் கிரிக்கெட் கிளப் சார்பில் தனபால் நினைவு கிரிக்கெட் திருவிழா

சிவகங்கை, ஜூலை.8-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பவர் ஸ்டார் கிரிக்கெட் கிளப் சார்பில் தனபால் நினைவு கிரிக்கெட் திருவிழா நேற்று நடைபெற்றது. இதில் முதல் பரிசு ரூபாய் 15,001 இளம்புயல் அணியினர் வென்றது வெற்றி பெற்ற அணிக்கு மானாமதுரை நகராட்சி கவுன்சிலர் (அஇஅதிமுக) தெய்வேந்திரன், மாவட்ட வர்த்தக அணி துணை செயலாளர் மனோஜ் குமார் இரண்டாம் பரிசு ரூபாய் 12,001 பவர் ஸ்டார் மறவர் தெரு வென்ற அணிக்கு கன்னர் தெரு எச்பி ஸ்பெல்லிங் ஸ்டேஷன் ரமேஷ் வழங்கினார். மூன்றாம் பரிசு 9,001 திருப்புவனம் அணியினருக்கு மானாமதுரை நகராட்சி 23 வது வார்டு கவுன்சிலர் சித்ரா கணவர் மன்னார் மன்னன் வழங்கினார்.நான்காம் பரிசு 6,001 பெற்ற அணிக்கு வி எம் ஆர் மீன் சர்வீஸ் மணிகண்டன் வழங்கினார். சிறப்பு பரிசு 10,001ஐ மானாமதுரை நகர மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, கார்த்திகேயன் (மீன்கடை), மணிமாறன் (துபாய்) வழங்கினார், வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளை அஇஅதிமுக மாவட்ட கழகப் பிரதிநிதி சி.ஆர்.மகேந்திரன் வழங்கினார். போட்டிகளில் பல்வேறு சாதனைகளை படைத்த வீரர்களுக்கு ஆறுதல் பரிசு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.



## ரெப்கோ வங்கி, வேலூர் கிளை தாயகம் திரும்பியோர் நல அறக்கட்டளை சார்பில் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா

வேலூர், ஜூலை.08-

வேலூர் மாவட்டம், அண்ணா சாலை, டார்லிங் ரெசிடென்சி கூட்டரங்கில், ரெப்கோ வங்கி, வேலூர் கிளை தாயகம் திரும்பியோர் நல அறக்கட்டளை சார்பில் தாயகம் திரும்பிய மகளிருக்கு இலவச தையல் இயந்திரம் மற்றும் நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா

வேலூர் டார்லிங் ரெசிடென்சியில் ரெப்கோ வங்கி தலைவரும் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் இயக்குனருமான சந்தானம் தலைமையில் நடை பெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி தாயகம் திரும்பிய மகளிருககு நலதிட்ட உதவிகள், கல்வி உதவித்தொகை, மருத்துவ உதவித்தொகை, ஒற்றை பெற்றோர் அல்லது பெற்றோர் அல்லாத குழந்தைகளின் படிப்பு செலவை வங்கிய ஏற்கும் என பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரில் உரையாடி, பேரு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்வின்போது வேலூர் கிளை ரெப்கோ வங்கி ஏ.ஜி.எம். விக்னேஷ்வரி, உதவி மேலாளர்கள், ஹரிஹரசுதா, நரேஷ், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் மண்டல மேலாளர் காதர்பாஷா, ரெப்கோ வங்கி பேரவை பிரதிநிதி இளங்கோவன், வங்கி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ரெப்கோ உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதில் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டு குறைகளின் பெயரில் மனு பெற்று அவர்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் உதவிகள் வழங்கப்படும் என உறுதி அளித்தனர். இத்திட்டத்தின் மூலமாக 73பேர் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது. இறுதியில் ரெப்கோ வங்கி அலுவலர் சதீஷ் நன்றியயுரையாற்றி விழா நிறைவுபெற்றது.




## தாம்பரம் அடுத்த கௌரிவாக்கத்தில் தங்கமயில் ஜுவல்லரியின் புதிய 63 வது கிளைகள் திறப்புவிழா

தாம்பரம், ஜூலை.08-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதிக் குட்பட்ட தங்கமயில் ஜுவல்லரி நிறுவனம் கௌரிவாக்கத்தில் தனது புதிய 63 வது கிளைகளை 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரம்மாண்டமாக தொடங்கி உள்ளது.

தங்கமயில் ஜுவல்லரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர், பலராம கோவிந்த தாஸ் மற்றும் இணை நிர்வாக இயக்குனர், பா.ரமேஷ் ஆகியோர் திறந்து வைத்தனர். தலைமை நிதி அதிகாரி, ராஜேஷ் கண்ணா, பொது மேலாளர் கோகுல் ஆகியோர் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

தங்க நகை விற்பனையில் 33 ஆண்டுகளாக தனக்கென தனியொரு அடையாளத்தை பதித்துள்ள இந்த நிறுவனம் 35இலட்சம் வாடிக்கையாளர்களுடன் தமிழகம் முழுவதும் 60க்கும் அதிகமான கிளைகளுடன் பிரம்மாண்டமாக இயங்கி வருகிறது. கடந்த பிப்ரவரி மாதம் சென்னை, தியாகராய நகரில் 60வது கிளையை தொடங்கியது. அதனைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் சென்னை, விருகம்பாக்கத்தில் 61வது கிளையையும், 62வது கிளையை ஐயப்பன் தாங்கலிலும் தொடங்கியது. தற்போது (ஜூலை' 2025) 63வது கிளையை கௌரிவாக்கத்தில் திறப்பு விழாவின் மிக முக்கிய அம்சமாக ஷோரூம் உள்ளேயே பிரத்தியேக பிரைடல் ஸ்டோரை அறிமுகப்படுத்தி, அதில் "தங்க மாங்கல்யம்" என்னும் தனித்துவமான திருமண நகை கலெக்சன்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. திறப்பு விழா சலுகையாக ஒவ்வொரு 10 கிராம் தங்கத்துக்கும் ரூ.3,000 தள்ளுபடி, வெள்ளி கிலோவுக்கு ரூ.5,000 வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. மேலும், வைரம் ஒரு காரட்டுக்கு ரூ.15,000 வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மேலும், சேமிப்புத் திட்டத்தில் இணையும் அனைவருக்கும் நிச்சய பரிசுகள் உண்டு. இச்சலுகை இம்மாதம் (ஜூலை) 27ஆம் தேதி வரை மட்டுமே." சென்னை மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களின் அடிப்படையில் புதிய ஷோரூம்களை வடிவமைத்துள்ளோம். உட்கட்டமைப்பு, பார்க்கிங் வசதிகள் என்று அனைத்திலும் அதிநவீன வசதிகளை அறிமுகப்படுத்தி வருகிறோம். 1500 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து தானும் வளர்ந்து தன்னைச் சார்ந்தவர்களையும் வளர்ப்பது தான் தங்கமயில் ஜுவல்லரியின் வளர்ச்சி என்று நிர்வாக இயக்குனர் கூறியது குறிப்பிடத்தக்கது.



■ வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நேற்று (07.07.2025) நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் சரவணன், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தார்.

## ஜனநாயகத்தின் நான்காம் தூணை முடக்க நினைக்கும் மேயர் சுஜாதா மக்கள் பணியில் ஈடுபாடு இல்லாமல் அராஜகத்தில் தலை விரித்தாடும் வேலூர் மாநகராட்சி நிர்வாகம்

### கண்டுகொள்ளாமல் சுயநலத்தோடு பதவியை காப்பாற்றிக்கொள்ள கடந்து செல்லும் கலெக்டர்



வேலூர் ஜூலை.08-

வேலூர் மாநகராட்சியில், மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மக்களுக்கான.. மக்களுக்காக... மக்கள் நலன், அடிப்படை வசதி குறைகளை மாமன்ற உறுப்பினர்கள் கூறும் பொழுது, மாநகராட்சி மேயர் சுஜாதா மற்றும் ஆணையர் ஆர்.லட்சுமணன் ஆகியோர் சட்டவிரோதமாக, அராஜக செயல்பாட்டாலும் பத்திரிகையாளரை போட்டோ வீடியோ எடுக்க ஆட்களை ஏவிவிட்டு படம் மற்றும் ஒளிப்பதிவு செய்ய தடை விதிப்பதும், போட்டோ மற்றும் ஒளிப்பதிவு செய்ய தொடர்ச்சியாக தடை விதிக்கும் மேயர் சுஜாதா அவர்களை பதவி நீக்கம் செய்ய மாநகர பொதுமக்கள் குரல் கொடுத்து வருகின்றனர்...

வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா அவர்களின் வார்டாக இருந்த போதிலும் அவர் இந்த பகுதிக்கு ஒரு முறை கூட வந்தது பார்க்கவில்லை, அந்த வார்டு பொதுமக்கள் குடிநீர், அடிப்படை வசதிகள் கூட செய்து தராத நிலையில் பொதுமக்கள் கொந்தளித்து வருகின்றனர்.

வேலூர் அருகே அடிப்படை வசதிகளை கேட்டு பொதுமக்கள் மூன்று மணி நேரத்திற்கும் மேலாக சாலை மறியல்...

சென்னை பெங்களூர் நெடுஞ்சாலையில் 3 மணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து பெரிதும் பாதிப்பு...

வேலூர் மாவட்டம், முள்ளிபாளையம், கே.கே. நகர்

பகுதியில் கடந்த பல மாதங்களாக வீட்டில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் செல்வதற்கான வழி இல்லை,

மழைநீர் செல்வதற்கான வழி இல்லாததால் ஆங்காங்கே கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் அதிகரிப்பு...

தெருக்களில் சாலை அமைக்கப்படவில்லை எனவும், சுத்தமான குடிநீர் வழங்கப்படவில்லை என்றும்

போதிய அளவில் போக்குவரத்து வசதி இல்லை எனவும்,

இதுபோன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டுமெனவும்.

வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா அவர்களின் வார்டாக இருந்த போதிலும் அவர் இந்த பகுதிக்கு ஒரு முறை கூட வந்தது பார்க்கவில்லை என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

சாலையின் இரு பக்கமும் மாட்டு வண்டிகளை நிறுத்தி

சுமார் மூன்று மணி நேரத்துக்கு மேலாக சாலை மறியலில் ஈடுபட்டு போக்குவரத்து நெரிசல் அதிகரித்த நிலையில்.. சம்பவ இடத்திற்கு

வேலூர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் சீனிவாசன், வேலூர் தாசில்தார் வடிவேல் ஆகியோர் பொதுமக்களிடம் அணுகு முறையை கடைப்பிடித்து பேச்சுவார்த்தை நடத்திய பின் சாலை மறியல் கைவிடப்பட்டது. இங்கு மட்டும் இல்லாத பல்வேறு இடங்களிலும் அடிப்படை வசதிகள் கூட செய்து தரவில்லை என மாமன்ற உறுப்பினர்கள் அடுக்கடுக்கான கோரிக் கைகளை மாமன்ற கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் முன்வைத்து வருகின்றனர். இதுபோன்று மக்கள் நலன் கருதி கோரிக்கை வைக்கப்படும் செய்திகளை வெளியிட வேண்டாம் எனவும், பத்திரிகையாளர்களுக்கு போட்டோ மற்றும் ஒளிப்பதிவு செய்ய தொடர்ச்சியாக தடை விதித்து வரும் மாநகராட்சி மேயர் சுஜாதா மற்றும் மாநகராட்சி நிர்வாகம், ஜனநாயகத்தின் நான்காம் தூணை முடக்க நினைக்கும் இவர்கள் மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்கி மேயர் சுஜாதா அவர்களின் பதவியை நீக்க வேண்டுமென மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வேலூர் மாநகர பொதுமக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை வைத்து வருகின்றனர்.



## பல்லாவரம் பாரதிநகர் பகுதியில் பொது மக்களுக்கு கட்டணமில்லா இசேவை முகாம் துவக்க விழா

பல்லாவரம், ஜூலை.08-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவாரம் பாரதிநகர் பகுதியில் பொதுமக்கள் வசதிக்காக கட்டணமில்லா இசேவை முகாம் ஜே.மேத்யூசகாயராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த இசேவை முகாமில் புதிய வாக்காளர் அடையாள அட்டை மற்றும் திருத்தம், புதிய பான்கார்டு பெறுதல் மற்றும் திருத்தம், ஆதார்கார்டு திருத்தம், சாதிசான்றிதழ், வருமான சான்றிதழ், முதியோர், விதவைகள் பென்ஷன், இருப்பிட சான்றிதழ் உள்ளிட்டவைகளை பொது மக்களுக்கு கட்டணமில்லாமல் வழங்கபடுகிறது. இதில் சமூக ஆர்வலர்கள், மற்றும் தங்கராஜ், புஷ்பராஜ், அருள், சிவா, பாபு வீரப்பன், மோகனவேல், வாசுதேவன், ஜோன், செந்தில்குமார், முகமது சரீப், கண்ணன், நாகராஜ், பிரசாத், கலைமதி, லோகநாதன், பாஸ்கர், ராச அலி, இம்ரான், கணபதி, உட்பட ஏராளமான பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## திருச்சியில் முப்பெரும் விழா

திருச்சி, ஜூலை.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, நம்முடைய பள்ளிக்கல்வித்துறை சார்பில் முப்பெரும் விழா திருச்சியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் துறை அமைச்சர் கே.என்.நேரு பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி இணைந்து, மாநிலம் முழுவதும் இருந்து தேர்வான மற்றும் அரசுத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் 100 பள்ளிகளுக்கு தலா ரூ.10 லட்சம் ஊக்க நிதியுடன் பாராட்டுச் சான்று கேடயத்துடன் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது வழங்கப்பட்டது.

கற்றல் கற்பித்தல் உள்ளிட்ட பன்முக செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் 76 பள்ளிகளுக்கு பேராசியர் அன்பழகன் விருது வழங்கப்பட்டது. கற்றல் அடைவுக்கான 100 நாள் சவாலில் பங்கேற்ற 4,552 தொடக்கப் பள்ளிகளுக்கு சிறப்பு விருது ஆகியவற்றை அந்தந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடம் வழங்கி, வாழ்த்தினார். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியங்களில் செயல் பட்டு வரும் அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் 14 தலைமை ஆசிரியர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இதில் மேலபிடாவூர், குலையனூர்,அரசகுளம், மேல பசலை, அரிமண்டபம், சீனிமடை, கால்பிரிவு, பறைன்யங்குளம், சித்தலகுண்டு, கல்குறிச்சி, பெரிய கோட்டை, மூங்கில் ஊரணி, கே. கொம்புக்காரனேந்தல், அரசு உதவி பெறும் ஆர்.சி பள்ளி ராஜகம்பீரம் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழும் கேடயமும் வழங்கப்பட்டது.மேலும்

காவிரி கரைபுரண்டு ஓடும் திருச்சி மாநகரில் அரசுப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்கமித்த முப்பெரும் விழா இனிய அனுபவமாக அமைந்தது.



## இந்து சமய அறநிலை துறை சார்பில் சலவன்பேட்டை ஆணைகுளத்தம்மன் திருக்கோயிலில் அறங்காவலர் குழு தலைவர் பதவியேற்பு விழா

வேலூர், ஜூலை.08-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சலவன் பேட்டை, ஆணைகுளத்தம்மன் திருக்கோயிலில், இந்து சமய அறநிலைத்துறை ஆணைகுலத்தம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களாக பதவியேற்பு விழா, அறங்காவலர் குழு மாவட்டத் தலைவர் அசோகன் தலைமையில் பதவியேற்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்த பதவியேற்பு விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தம்பி துரை சிங்காரம், அப்பாஜி சுவாமிகள், செங்காநத்தம் சசிதர் சுவாமிகள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு மரியாதைகள் செய்து கௌரவித்து கிராம தேவதை ஆணைகுளத்தம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவராக சி.சிவக்குமார் (எ) செல் சிவா, பிரேமாவதிநிலவரசு மற்றும் ரேவதிஅன்பழகன் ஆகியோர் உறுப்பினர்களாக பதவியேற்றனர். இதனைத் தொடர்ந்து இவர்களை கௌரவித்து பட்டாபிஷேகம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக பாலாஜி லித்தோ ராஜேஷ் கண்ணா, அலங்கார் தியேட்டர் உரிமையாளர் தேவராஜ், எல்.ஐ.சி. சீனிவாசன் மற்றும் தொழிலதிபர்கள், பொதுமக்கள் அனைத்து கட்சி மாவட்ட அலுவலக தலைவர்கள் செயலாளர்கள் பல்வேறு ஆலய நிர்வாக பக்தர்கள் என பலர் கலந்துகொண்டு பதவியேற்பு விழாவை சிறப்பித்து வாழ்த்து தெரிவித்து கௌரவித்தனர்.




## வேலூர் அருகே அரசு புறம்போக்கு இடம் ஆக்கிரமிப்பு, தேன்பள்ளி ஊராட்சி வார்டு உறுப்பினர் புகார்

### அதிரடியாக மீட்ட காட்பாடி தாசில்தார், மாவட்ட நிர்வாகத்தையும் காட்பாடி தாசில்தாரையும் பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்

வேலூர், ஜூலை.08-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தேன்பள்ளி ஊராட்சி வெங்கடாபுரம் அருந்ததி காலனி கிராமத்தில் கடந்த 6 மாதங்களாக அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடத்தில் தனிநபரான பெல் (மத்திய அரசு நிறுவனம்) கம்பெனியில் பணிபுரிந்த ஜெயராமன் (ஓய்வு), தேன்பள்ளி கிராம நத்தம்புல எண் : 225/29 காலிமனையை ஆக்கிரமித்து சிறிய கட்டிடம் கட்டி கிராம மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதை சுட்டிகாட்டி இடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மீட்டு தரும்படி தேன்பள்ளி ஊராட்சி மன்ற 3வது வார்டு உறுப்பினர் கீதா வெங்கடேசன், கிராம மக்கள் ஆதரவுடன் மாவட்ட ஆட்சியருக்கு புகார் மனு அளித்தார். அதன்படி காட்பாடி தாசில்தார் ஜெகதீஸ்வரன் உத்தரவுப்படி மேல்பாடி வருவாய் ஆய்வாளர், தேன்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் , உதவியாளர்களுடன் சென்று, இந்த காலிமனை அரசுக்கு சொந்தமான இடமாகும் என்ற என்ற அதிரடி நடவடிக்கை எடுத்து அறிவிப்பு பலகை வருவாய்துறையால் வைக்கப்பட்டது. இதற்காக மாவட்ட ஆட்சியர், காட்பாடி தாசில்தார் மற்றும் வருவாய் துறையினருக்கு வார்டு கவுன்சிலர் கீதா வெங்கடேசன் மற்றும் கிராம மக்கள் சார்பாக மாவட்ட நிர்வாகத்தையும் காட்பாடி தாசில்தாரையும், பாராட்டி நன்றியை தெரிவித்து வருகின்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161